**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**<u>CC.No.160/2023</u>**

**Deposition of PW–1/LW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ப்ரிதிவிராஜ் | **Age** | : | 30/2026 |
| **Father's Name** | : | திரு. முருகானந்தம் | **Religion** | : | இந்து |
| **Village** | : | கோம்பை | **Calling** | : | விவசாயம் |
| **Taluk** | : | உத்தமபாளையம் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **01/07/2026.**

1, 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>சாட்சி மனு எண் 1681/2026ன் கீழ் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

5) நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களைதான் போலீசார் விசாரித்தபோதும் எனது புகாராகவும் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகாரை நான் கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான். புகாரில் 16.2.2019 என தேதி குறிப்பிடப்பட்டு அதற்கு முன்பாக இன்று என்ற வார்த்தை இடைச்செருகளாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் புகாரில் காலை என எழுதப்பட்டு நேரம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) அதேபோல் புகாரில் OS.No.174/2014 மூலம் பெறப்பட்ட தீர்ப்பின்பேரில் என்ற வாசகம் இடைச்செருகளாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில்

வழக்கு விபரங்கள் குறித்து எழுதப்பட்டுள்ள விபரங்களுக்கு கீழாக நான் கையொப்பமிட்டுள்ள இடத்திற்கும் மேலாக இடைவெளி உள்ளது என்றால் சரிதான். கண்ணன் என்பவரிடம் பாதை கேட்டுதான் மேற்படி உரிமை வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல அவர் ஆவணத்தில் பாதை இருப்பதாக எழுதி கொடுத்துவிட்டு மறுத்ததால் அது சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்தேன்.

7) அந்த வழக்கில் பெறப்பட்ட தீர்ப்பை நடைமுறைப்படுத்த EP.No.3/2026 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் உத்தமபாளையத்தில் மனுதாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான் மேற்படி அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புக்கு பிறகுதான் இந்த வழக்கு சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. அந்த தீர்ப்பின்மீது அவர்கள் மேல்முறையீடு செய்தார்கள் மேல்முறையீடு நிலுவையில் இருக்கும்போதே அந்தப் பாதையில் கரை கட்டினார்கள் அதன்பிறகு தென்னங்கன்று வைக்க குழி தோண்டினார்கள் அதன்பிறகுதான் இந்த பிரச்சனை ஏற்பட்டது.

8) இந்த இடம் சம்பந்தமாக உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளபோது நான்தான் அங்கு அத்துமீறி நுழைந்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் எங்கு நடந்தது என்றால் கண்ணன் எங்களுக்கு எழுதி கொடுத்த பாதையில் நடந்தது. எனது நிலத்திற்கு தெற்கே யாருடைய நிலம் உள்ளது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. கண்ணனது இடத்திற்கு வடக்கே யாருடைய நிலம் உள்ளது என்றால் எனக்கு சரியாக திசை தெரியவில்லை.

9) சம்பவ இடத்தில் உள்ள நிலங்கள் யார் யாருக்கு சொந்தமானது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். கண்ணன் பாக்கியராஜ் அருவாள் என்ன ஆனது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது அதுகுறித்து வீடியோ உள்ளது. அந்த அருவாள் சுமார் 1 ½ அடி நீளம் இருக்கும். அருவாளால் வெட்டுக்காயம் ஏற்பட்டதா என்றால் கீறல் காயம் ஏற்பட்டது அதில் ரத்தம் வந்தது. சண்டை நடந்தபோது சம்பவ இடத்தில் நான் ஒரு ஆள்

மட்டும்தான் இருந்தேன் என்றால் எனது தரப்பில் நான் ஒரு நபர்தான் இருந்தேன் அவர்கள் தரப்பில் 4, 5 நபர்கள் இருந்தார்கள்.

10) சண்டை நடந்த இடத்திற்கும் நான் இருந்ததாக சொல்லும் ரூமிற்கும் இடையே சுமார் 500 மீட்டர் தொலைவு இருக்கும். சண்டை நடந்த இடத்தை நான் போலீசாருக்கு நேரடியாக அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். என்னை எரிந்ததாக சொல்லும் கல் என்ன ஆனது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்கள் மருத்துவமனை சென்ற வழியில்தான் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான்.

11) காவல் நிலையத்தில் தகவல் கொடுத்துவிட்டு மருத்துவமனை சென்றோமா என்றால் இல்லை ரத்தம் வடிந்ததால் நேரடியாக மருத்துவமனை சென்றுவிட்டோம். நான் மருத்துவமனை சென்று சுமார் 2 முதல் 3 மணி நேரம் கழித்து போலீசார் வந்து விசாரித்தார்கள். நான் மருத்துவமனை சென்றபோது என்ன நேரம் இருக்கும் என்றால் சரியாக ஞாபகம் இல்லை 12 முதல் 1 மணி இருக்குமா என்றால் இருக்கும். மருத்துவர் என்னை விசாரித்தபோது எனக்கு எந்த வகையில் காயம் ஏற்பட்டது என்ற விபரத்தை சொன்னேன் என்றால் சரிதான்.

12) போலீசார் என்னை விசாரித்து கையொப்பம் வாங்கிய பேப்பரில் எனது மாமா குலோத்துங்கன் கையொப்பம் செய்தாரா என்றால் ஞாபகம் இல்லை. நான் காவல் நிலையத்தை தாண்டி மருத்துவமனை சென்றபோது கண்ணன் என்மீது புகார் கொடுத்துக் கொண்டிருந்தார் என்றால் இல்லை. அதே சம்பவத்தில் நான் கண்ணனையும் அவரது மனைவியையும் தாக்கியதாக சொல்லி ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

13) அந்த வழக்கில் சாட்சி சொல்லிவிட்டு சென்ற அமரன் உள்ளிட்ட நபர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் தெரியாது. நான் சொன்னதுபோல் சம்பவம்

எதுவும் நடைபெறவில்லை என்றும் நான் சொன்னதுபோல் காயம் எதுவும் எனக்கு ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உரிமையியல் வழக்கு நிலவையில் உள்ளபோது நான்தான் அந்த நிலத்திற்குள் அத்துமீறி நுழைந்தேன் என்றும் கண்ணன் என்பவர் கொடுத்த புகாரிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக இந்த புகார் கொடுத்து அதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.01 17:45:01 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**